www.malankaralibrary.com

கினானானைய கிறிஸ்தவர்கள் என்பவர்கள் யார்?

கினானானைய கிறிஸ்துவர்கள் அல்லது கானானியர்கள் என்பவர்கள் கேரள மாநிலத்தில் தற்போது வாழ்ந்து வருகின்ற மூன்று இலட்சத்திற்கும் மேல் எண்ணிக்கை கொண்ட, மலையாள மொழியை தாய்மொழியாகவும் கொண்ட ஒரு கிறிஸ்தவ சமூகத்தினர் ஆவர். இவர்கள் மிகவும் பழமையான, நான்காம் நூற்றாண்டு முதல் உள்ள இந்திய வாழ்க்கை வரலாற்றை கொண்டுள்ளனர். நான்காம் நூற்றாண்டில் தோமா என்பவரின் தலைமையில் இந்தியாவுக்கு குடியேறியவர்களின் வழிமரபினர்களே இவர்கள்.

பாரசீகப் பேரரசின் **க்னானாயி** என்ற இடத்தில் இருந்து இந்தியாவின் தமிழகத்தில் சேர மன்னர்கள் ஆண்டு வந்த நிலப்பகுதியான கொடுங்கல்லூர் என்னும் இடத்தில் ஏறக்குறைய நானூறு நபர்கள் அடங்கிய 72 கிறிஸ்தவ குடும்பங்கள் இந்தியாவிற்கு வந்ததாக ஹிப்போளிட்டஸ் தனது வரலாற்று நூலில் குறிப்பிட்டிருக்கிறார். இதனை பல்வேறு மற்று வரலாற்று ஆசிரியர்கள் பிற்காலங்களில் மெய்ப்படுத்திக் கூறியுள்ளனர்.

கிபி 345 ஆம் ஆண்டில் இந்தியா வந்தடைந்த க்னாயி தோமாவின் குழுவினர் அன்று தமிழகத்தின் கேரள நிலப்பகுதியை ஆண்டு வந்த **சேரமான் பெருமாளிடமிருந்து** கொடுங்கல்லூரில் தங்கி வாணிகம் செய்ய அனுமதியை பெற்றுக் கொண்டார். இவர்கள் கொடுங்கல்லூர் பட்டணத்துக்கு அருகில் மகாதேவர் பட்டணம் என்ற ஓர் நகரை நிறுவவும் பல ஆண்டுகள் தொடர்ந்து அங்கே வாழவும் செய்தனர். பல்வேறு கால சூழ்நிலைகளின் காரணமாக கொடுங்கலூரிலிருந்து மற்று பிற பகுதிகளான உதயம்பேரூர், கோட்டயம் மற்றும் கல்லிச்சேரி போன்ற இடங்களுக்கும் இவர்கள் குடிபெயர்ந்தனர்.

இவர்கள் யூதா நாட்டின் தென் பகுதியை பூர்வீகமாகக் கொண்டிருந்ததனால் **தென்னவர்கள்** என்ற பெயரையும் கொண்டுள்ளனர். ஆனால் இந்த சமூகத்தினர் தோமா கிறிஸ்தவர்களோடு மிகுந்த நட்பும் தோழமையும் ஒத்துழைப்பும் கொண்டவாறு ஒற்றுமையோடு வாழ்ந்து வருகின்றனர்.

யூதர்களான இந்த சமூகத்தினர் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரயேல் மக்களின் உண்மையான இரத்த உறவு என்னும் புனிதத்தை மரபில் தொடர்ந்திட தங்கள் சமுதாயத்தை சார்ந்தவர்கள் இடையே மட்டுமே திருமணங்கள் நடத்தி வாழ்ந்து வருகின்றனர். இவர்களது திருமண நிகழ்வு கலாச்சாரங்கள் தனித்தன்மை வாய்ந்தவையாகும். குறிப்பாக **மெஹந்தி இடுதல், நெல்லும் நீரும் கொடுத்தல், பாலும் பழமும் கொடுத்தல், மூடலும் திறத்தலும், எண்ணெய் தேய்த்தல்** போன்ற சடங்குகள் மற்று கிறிஸ்தவ சமூகங்களில் இருந்து இவர்களை முற்றிலும் வேறுபடுத்திக் காட்டுகின்றன.

www.malankaralibrary.com

இவ்வாறு ஒரே சமூகமாக தோமா கிறிஸ்தவர்களோடு வாழ்ந்து வந்த கினானானையக் கிறிஸ்தவர்கள் திருச்சபையில் ஏற்பட்ட பிளவில் புத்தன் கூற்றினர் என்ற சமூகத்தினராக மாறி அனைவரும் யாக்கோப திருச்சபையின் பகுதியினராகி **யாக்கோபாயா கினானானையர்கள்** எனப்பட்டனர். மற்று பிரிவினர் பழைய கூற்றினரான சீறோ மலபார் திருச்சபையின் திருவழிபாட்டு முறையை பின்பற்றி கத்தோலிக்க திருச்சபையோடு 1911 ஆம் ஆண்டில் மறு ஒன்றிப்படைந்தனர். அவர்களுக்காக 1911 ஆகஸ்டு 29 ல் மறை ஆட்சி அமைப்பு உருவாக்கப்பட்டது. 1923 ல் இஃது கோட்டயம் மறைமாவட்டமாகவும் 2003 ல் உயர் மறைமாவட்டமாகவும் உயர்வு பெற்றது.

அவ்வாறே அந்தியோக்கியன் திருவழிபாட்டை கொண்டிருந்த கினானானைய யாக்கோபாயர்களுள் ஒரு பிரிவினர் அந்தியோக்கியா திருவழிபாட்டு முறையை பின்பற்றி கத்தோலிக்க திருச்சபையோடு உறவில் வருவதற்கு தங்கள் விருப்பத்தை திருத்தூதுவ அவையோடு அறிவித்தனர். அதன் படியாக **1921 ஆம் ஆண்டு ஜூலை 5** ஆம் நாளில் வத்திக்கானிலிருந்து கத்தோலிக்க திருச்சபையோடு ஒன்றிப்படைவதற்காகவும் அந்தியோக்கிய திருவழிபாட்டான மலங்கரை திருவழிபாட்டை தொடர்வதற்கான அனுமதியை பெற்றுக் கொண்டனர். அவர்கள் கோட்டயம் சீரோ மலபார் கோட்டயம் உயர் மறைமாவட்டத்தின் ஒரு பகுதியினராக ஆனால் மலங்கரை கத்தோலிக்க திருவழிபாட்டு முறைகளை பயன்படுத்தும் வரலாறு கொண்டவர்களாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கென்று தனி ஆட்சி அதிகார அமைப்பு இந்நாள் வரையிலும் நிறுவப்படவில்லை. குறிப்பாக கோட்டயம் சீரோ மலபார் கத்தோலிக்க உயர் மறைமாவட்டத்தின் ஒரு பகுதியினராகவே அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

வரலாற்றிலேயே முதல் முறையாக தற்போது அவர்களுக்காக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒரு புதிய ஆயரை நியமித்திருக்கிறார். **மேதகு கீவர்கீஸ் மார் அப்ரேம்** என்னும் பெயர் கொண்ட ஆயர் கோட்டயம் உயர்மறைமாவட்டத்தின் துணை ஆயராகவும் குறிப்பாக மலங்கரை கத்தோலிக்க திருவழிபாட்டு மரபை பின்பற்றுகின்ற கினானானைய சமூகத் திருச்சபையினருக்காக தனிப் பொறுப்பு கொண்டவராகவும் செயல்படுகின்றார்.

Ã.Ã..நவம்பர் 14ஆம் நாளில் கோட்டயம் உயர் மறைமாவட்டத்தின் கிறிஸ்து அரசர் பேராலயத்தில் வைத்து புதிய ஆயர் திருவல்லா உயர்மறைமாவட்ட பேராயரிடமிருந்து ஆயர்ப் பட்டத்தை பெற்றுக் கொண்டார். ஆயர்ப் பட்ட திருச்சடங்குகளின் போது கோட்டயம் உயர் மறைமாவட்டத்தின் ஆயர்களும் கினானானைய யாக்கோபாயா திருச்சபை சமூகத்தின் ஆயரும் உடன் இருந்தனர்.

www.malankaralibrary.com

தற்போது கினானானைய மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையினர் 12 பங்குகளிலாக கேரளாவின் பல பகுதிகளில் கோட்டயம் உயர் மறைமாவட்ட ஆட்சி அமைப்பில் உள்ளனர்.

Fr. மரிய ஜாண்